தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-5-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வாழையின் விலை ஏற்றத்திற்கு வாய்ப்புகள் குறைவு**

வேளாண் மற்றும் கூட்டுறவுத் துறையின் இரண்டாம் முன்கூட்டிய மதிப்பீட்டின்படி 2015-16 ஆம் ஆண்டு இந்தியாவில் வாழை 8.36 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 298.95 இலட்சம் டன்கள் உற்பத்தியாகும் என்று வெளியிட்டுள்ளது. இந்தியாவில் மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம் மற்றும் ஒடிசா ஆகியவை வாழை உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில் வாழை, கடந்தாண்டைக் காட்டிலும் சற்று அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தேனி, திருச்சி, ஈரோடு, தூத்துக்குடி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் வாழை உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

இந்தியாவின் வாழை உற்பத்தியில் பெரும் பகுதி உள்நாட்டு நுகர்வுக்கு பயன்படுகின்றது. உலகளவில் வாழை உற்பத்தியில் இந்தியா 30 சதவிகிதம் உற்பத்தி செய்கின்றது. ஆனால் ஒரு சதவிகிதத்திற்கு குறைவாகவே ஏற்றுமதி செய்கின்றது. இந்தியாவின் வாழை, கத்தார், சவுதி அரேபியா, ஓமன், ஐக்கிய அரபுநாடுகள் மற்றும் குவைத் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. நுகர்வோர் விரும்பும் ஜி-9 என்கிற ரகம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

கோடை கால பழங்களான மாம்பழம் போன்றவைகளின் வரத்து அதிகமானதால் வாழையின் விலை குறைந்து காணப்படுகிறது. வெப்பம் அதிகமானதால் வாழையில் விரிசல் வருவதாலும், உற்பத்தி அதிகரித்ததாலும் விவசாயிகள் வாழை பழத்தை விற்கும் கட்டாயத்தில் உள்ளனர்.

எனவே இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், வாழை ரகங்களான பூவன் மற்றும் கற்பூரவள்ளி வாழையின் கடந்த 13 வருடங்களாக நிலவிய மாதாந்திர விலை மற்றும் நேந்திரன் வாழையின் கடந்த 8 வருடங்களாக நிலவிய மாதாந்திர விலை ஆய்வுகளை மேற்கொண்டது.

கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி சந்தை ஆய்வு முடிவுகளின் படி வாழையின் பண்ணை விலை மே - ஜீன் 2016ல் பூவன் கிலோவிற்கு ரூ.8-10 வரையும் கற்பூரவள்ளி கிலோவிற்கு ரூ14-16 வரையும் மற்றும் நேந்திரன் கிலோவிற்கு ரூ.35-37 வரை இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்-641 003
தொலைபேசி - 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர் பழப்பயிர்கள் துறை
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் :- 0422-6611269

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்